27th August 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ''சர்வீஸ் கண்டிஷன்'' ஆகியவைகளைக் கவனிப்பதற்கு என்று தற்போது ஒரு குழு அமைத்திருப்பதால், அந்தக் குழு "Rules and orders relating to Elementary and High Schools" ஐ ஆராய்ந்து, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்துக்களை மனதில் கொண்டு, சிபாரிசு செய்தால் அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : அந்தக் குறைபாடுள்ள விதிகளைக் கட்டாயப்படுத்தி அமுலாக்கும்போது, சில நிர்வாகத்தினர் இந்த விதிகளை அமுலாக்கமாட்டோம் என்று சொன்னால், அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடிய சட்டபூர்வமான அதிகாரம் 'மெட்ராஸ் எஜுகேஷனல் ரூல்ஸ்'' படி இருக்கிறதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இதற்கொரு ''ஸ்டாசுட்டரி பேசிஸ்'' இல்லாததால்தான், இதை நம்மால் அமுலாக்க முடியவில்லை என்ற சங்கடம் இருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே அரசாங்கம் இதை ஆராய்ந்து கல்வி சம்பந்தமான எல்லா விதிகளுக்கும் சட்டபூர்வமான ஒரு ஆதாரம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத்தலைவரவர்களே, அதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கும் குழுவின் அறிக்கையை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அறிக்கை கிடைத்தபிறகு சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க என்னென்ன முயற்சிகளைச் செய்யலாம் என்று அரசு ஆராயும்.

Collection of maintenance fees

*13. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government have decided to permit managements of aided Secondary Schools to levy Maintenance Fees from students ; and

(*b*) if so, the details thereof ?

பேணுதல் கட்டணம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து பேணுதல் கட்டணங்களை வசூலிக்க அதன் நிர்வாகிகளை அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

[27th August 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) & (இ) : எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் 6-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரையிலும், 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரையிலும் படிக்கும் எல்லா மாணவர்களிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 5/- வீதம் வசதிக் கட்டணம் வசூலிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்தக் கூடுதல் வசூல் ஏற்கெனவே வசூலிக்கப்படும் சிறப்புக் கட்டண மொத்த தொகைக்கு மேற்படக் கூடாதென்றும், வசதிக் கட்டண வசூல் தொகையை பள்ளிகளைப் பேணுவதற்கு பயன்படுத்தலாமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

4-20 p.m. திரு. எம். ராஜா அய்யர் : துணைத் தலைவர் அவர்களே, வசதிக் கட்டணமானது ரூ. 5/-க்கு மேற்படாது இருக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டதாக அறிகிறேன். அதற்குக் குறைவான தொகையைக்கூட வசூல் செய்ய நிர்வாகத்திற்கு அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன். மேலும் இந்த வசதிக் கட்டணத்தின் மூலமாகக் கிடைக்கும் பணம் முக்கியமாக எந்தப் பள்ளிக்கூடங்களுக்குத் தேவை என்றால், District Board Schools களுக்குத்தான் என்பது புரியும். ஆனால் கவர்மெண்ட், போர்டு உயர்நிலைப்பள்ளிகளில் Maintenance Fees என்ற அடிப்படையில் நிதி திரட்டினாலும்கூட, அப்படி வசூலிக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்யக் கூடாது என்று அரசாங்கம் ஆணையிட்டிருப்பதாக அறிகிறேன். அரசாங்கமோ அதிகாரிகளோ ஆணை பிறப்பித்து, அந்த நிதியை அப்படியே தேக்கி வைத்திருப்பதாக அறிகிறேன். எனவே பிற பள்ளிகளுக்கு ஒப்பாக District Board High Schoolகளிலும் இந்த நிதி செலவிடப்பட வேண்டும் என்ற வகையில், அதற்கான வழி முறைகளை அரசாங்கம் ஆராய்ந்து, எந்தவிதமான தடங்கலுமின்றி District Board High School களின் அபிவிருத்திக்காக அந்தப் பணத்தைச் செலவு செய்ய அரசாங்கம் ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று தகவல் என்னிடத்தில் இல்லை. அது போன்ற நிலைமை இருந்தால், ஆராய்ந்து தக்க முடிவெடுக்கப்படலாம்.

திரு. கே. அறிவழகன் : துணைத் தலைவர் அவர்களே, பேணுதல் கட்டண நிதி வசூலிப்பதை நிர்வாகிகளே பெற்றுக்கொள்கிற முறையில் இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற ஆணை அமைந்திருக்கிறது. முக்கியமாக Special Fees அத்தனையையும் பெற்றுச் செலவு செய்கிற முழுப் பொறுப்பைப் பெற்றிருக்கிற தலைமை ஆசிரியரே இந்தப் பேணுதல் கட்டணத்தைப் பெற்றுச் செலவு செய்வதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இந்த 5 ரூபாய் பேணுதல் கட்டணத்தை வசூல் செய்வதற்காக, பல்வேறு பள்ளிகளில் நூல்நிலையங்களுக்கான கட்டணத்தை மிகவும் குறைத்து நூல்கள் வாங்க வழியில்லாமல் இருக்கும் நிலைமையும் மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

27th August 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த வசதிக் கட்டணம் தலைமை ஆசிரியரால்தான் வசூலிக்கப்படுகிறது. வசூலித்து இன்னின்ன பள்ளிகளுக்குத்தான் செலவழிக்கலாம் என்று திட்டவட்டமான முறை கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டிடப் பராமரிப்பு, பழுதுபார்த்தல், பள்ளிகளுக்கு வசதி செய்தல், Text Book Teaching Aids போன்றவைகளை வாங்குதல், வரி செலுத்துதல் ஆகியவைகளுக்காகத்தான் செலவு செய்யலாம் என்றிருக்கிறது. தலைமை ஆசிரியரே வசூலித்துத்தான் இந்தப் பணிகளையாற்ற தரப்படுகிறது. ஆகவே முன்பு Library Fees என்று $1\frac{1}{2}$ ரூபாய் வசூலித்ததை இப்போது 50 காசு என்றாக்கியிருக்கிறோம். இப்படிப் பல்வேறு வகையில் குறைத்து பேணுதல் கட்டணம் 5 ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. Library Fees-ல் ஏற்றவேண்டுமானால், வேறு எதிலாவது குறைக்க வேண்டும். வேறு எதிலாவது குறைக்கலாம் என்றால், Library Fees-ல் ஏற்றலாம்.

திரு. டி. சந்தோஷம் : துணைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கும் ஆணைப்படி எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதமாக ரூபாய் 5 வசூலிக்கப்படுவதற்கான ஏற்பாடு இருக்கிறது. இது இலவசக் கல்வி தருவது என்ற அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதாகத் தெரிகிறது. கூடுமானால் அரசாங்கம் ஆணையை மாற்றி பணக்காரர்கள் குடும்பத்திலிருந்து வருகிற பிள்ளைகளிடம் ரூ. 10 வசூலித்துக்கொண்டு ஏழை மாணவர்களிடம் ஒன்றும் வசூலிக்காமல் விடுவது என்ற முறையை ஏற்படுத்துவது உசிதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இலவசக் கல்வி மூலம் யாருக்கும் சம்பளமில்லை என்ற நிலை இருக்கிறது. ஏற்கெனவே உள்ள விதிப்படி ஆண்டு முழுவதிற்குமாக அதாவது 9 மாதங்களுக்கும் சேர்த்து ரூ. 16.50 உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடமிருந்தும், ரூ. 10.50 அல்லது ரூ. 11 உயர்துவக்கப் பள்ளி மாணவர்களிடமிருந்தும் வசூலிக்கலாம் என்றிருக்கிறது. இப்படிப் பல்வேறு வகையில் வசூலிக்கப்பட்டதை மாற்றி, ரூ. 5 வசதிக் கட்டணமென்றும் மற்றது மற்றக் காரியங்களுக்கு என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வசூலித்த தொகைதான் வசூலிக்கப்படுகிறது இப்போது. ஆனால் அதில் ரூ. 5 க்கு மட்டும் வகை செய்யப்பட்டிருக்கிறது. வேறு வகையில் ரூ. 0.50, 0.25 என்று குறைத்து மிச்சம் செய்யப்பட்டு இந்தத் தொகை அளிக்கப்படுகிறது. ஏழைகளுக்கு ஒரு கட்டணம், பணக்காரர்களுக்கு ஒரு கட்டணம் என்றால், சரியாக இருக்காது. கல்லூரி புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி என்று வைத்திருப்பதால், இது ஆண்டு முழுவதற்குமாகச் செலுத்த வேண்டிய கட்டணமாக இருக்கிறது. அதில் ஒரு மாறுதல் வந்தாலும் இதிலும் மாறுதல் வரலாம். அந்த மாறுதல் செய்யப்படாத நிலையில் இதில் மட்டும் மாறுதல் செய்வது சரியில்லை.

திரு. எம். எத்திராஜுலு : துணைத் தலைவர் அவர்களே, சில ஹைஸ்கூல்களிலும் மற்றும் கல்லூரிகளிலும் ''டொனேஷன்'' என்ற

[27th August 1970

பெயரில் ரூ. 100, 250, 500 என்று மாணவர்களிடமிருந்து தொகை பெறப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதை அரசாங்கம் அனுமதிக்கிறதா? அப்படி அனுமதிக்காவிட்டால், இப்படிப் பட்ட கல்லூரிகளைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'டொனேஷன்' என்றுதான் சொல்கிறார். 'டொனேஷன்' என்றால் கொடை அல்லது நன்கொடை என்று பொருளாகும். அதற்குப் பெயரோ நன்கொடை. அவர்களாகவே விரும்பிக் கொடுக்கலாம். கோர்ட்டுக்குப் போனால்கூட சட்டப்படி இது செல்லும். இவர்கள் விரும்பிக் கொடுத்தார்கள், அவர்கள் விரும்பி வாங்கிக் கொண்டார்கள் என்று சொல்லலாம். அதற்கு ரசீதுதான் நன்கொடை ரசீது. இப்படி நன்கொடை வசூலிக்கும்போது, சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது. வேறு வகையில் வற்புறுத்தி வாங்கினால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கலாம். வேறு வகைகளில் வசூலித்துப் பணம் திரட்டுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்தால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும். குன்றத்தூர் அருகில் உள்ள கல்லூரியில் மாணவர்களிடமிருந்து ரூ. 700, ரூ.1000 என்று நிர்வாகிகள் வசூலித்ததாக மாணவர்களிடமிருந்து புகார் வந்து, அது பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னதன் பேரில், சென்னைப் பல்கலைக் கழகம் அந்தக் கல்லூரிக்குக் கொடுத்திருந்த அனுமதியை ரத்து செய்திருக்கிறார்கள். அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் அதை எதிர்த்து ஒரு ''ரிட்'' போட்டிருக்கிறார்கள். கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அந்த வகையில் பல்கலைக்கழகத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நன்கொடைத்திட்டம் என்று வைத்துக்கொள்கிறபோது, இவர்களாகவே விரும்பிக் கொடுத்ததாகத்தான் வரும். இதனால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே இதைப்பற்றி என்ன செய்யலாம் என்றுதான் யோசித்துக்கொண்டிருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்க வேண்டும். அதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பும் பள்ளிகளை வைத்து நடத்துகிறவர்களின் ஒத்துழைப்பும் இருந்தாலொழிய, சீரிய நிலையைப் பெறுவதென்பது கடினமாக இருக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பேணுதல் கட்டணம் ரூ. 5-க்கு மேல் பெறக் கூடாது என்று பள்ளிகளுக்கு ஆணையிட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் சில பள்ளிகளில் பேணுதல் கட்டணம் கூடுதலாக வாங்கப்படுவதாகத் தெரிகிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? இதன் காரணமாக எந்தப் பள்ளியின் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அப்படி வாங்கியிருப்பதாகத் தெரிந்தால் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

27th August 1970]

அப்படி அதிகப்படியாகக் கட்டணம் வாங்கியதாகப் புகாரை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. அறிவழகன் : துணைத் தலைவர் அவர்களே, பல தனியார் கல்லூரிகளிலும் இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு, ஸ்பெஷல் ஃபீஸ் பல மடங்காக வசூல் செய்யப்படுகிறது. அதைப்பற்றி அரசாங்கம் அவர்களுக்குச் சரியான ஆலோசனை கூற விரும்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அரசாங்கம் பொதுவாகக் கூறுகிற யோசனையெல்லாம் ஒழுங்காக, முறையாக சட்டதிட்டப்படி நடக்க வேண்டுமென்பதுதான். பல பள்ளிகள் இந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஒழுங்கு முறையோடு நடப்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றன. தவறுகள் நடக்க சில பள்ளிகள் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. சட்டத்திலிருக்கிற இண்டு இடுக்குகளில் புகுந்து கொண்டு தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இடம் தேடுகிறார்கள். இதை மாற்றுவதைத்தான் இப்போது அமைக்கப்பட்டிருக்கும் குழு ஆராய இருக்கிறது. அந்தக் குழுவின் யோசனையின்பேரில் நடவடிக்கை எடுக்க ஆலோசிப்போம். கூடுமானவரையில் சட்டங்களை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை முறைப்படி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். எத்திராஜுலு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்கு பதில் அளிக்கும்போது, 'டொனேஷன்' என்று வாங்கினார்களானால் தவறில்லை என்று சொன்னார்கள். நடுவில் வாங்கினாலும் தவறில்லை. ஆனால் கல்லூரிகளிலும், ஹைஸ்கூல்களிலும் பிள்ளைகள் இடம் கேட்கிற நேரத்திலேயே, 'டொனேஷன்' கொடுத்தால் தான் நாங்கள் சேர்ப்போம் என்று கட்டாயப்படுத்தப்படும் நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இது போன்ற புகார்கள் எழுப்பப்படுகின்றனவே தவிர, வேறொன்றுமில்லை. எனவே அப்படிப்பட்ட நிலவரங்களை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அது மாதிரிக் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர, எழுதிப் புகாரைத் தரமாட்டேன் என்கிறார்கள். நான் அவரிடமே சொன்னேன். கட்டாயமாகக் கேட்கிறார்கள் என்று புகார் மனு எழுதித் தாருங்கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னேன். சொல்லி விட்டுப் போகிறார்களே தவிர, எந்தப் புகாரும் அவர்கள் என்னிடம் எழுதிக் கொடுப்பதில்லை. அதற்குப்பிறகு அங்கு சேர்க்கப்பட்ட தம் பெண்ணுக்கோ பையனுக்கோ என்ன ஆபத்து ஏற்படுமோ என்று கருதிக்கொண்டு அந்தப் புகாரோடு வர மறுக்கிறார்கள். எனவே அதைப்பற்றி என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றியும் ஆராய வேண்டியிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது கொடை — தாராளமாக வழங்குவதை — நன்கொடை என்று குறிப்பிட்டார்கள். அப்படி 'டொனேஷன்' என்ற பெயரில்

[27th August 1970

கொடுக்கலாம். அதற்குச் சட்டத்திலிருந்து விதி விலக்கு இருக்கிறது; குற்றமில்லை, சட்டம் பாதிக்காது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில், இரண்டொரு நேரங்களில் 'டொனேஷன்' தருவதைக்கூட குற்றம் என்று கூறி 'பிராசிகியூஷன்' செய்து கோர்ட்டில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பல கேஸ்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : நான் அறியமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப் பற்றியும் ஆராய்ந்து அதன் அடிப்படையில் கூட நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : 'ஸ்பெஷல் ஃபீஸ்', 'ஸ்போர்ட்ஸ் ஃபீஸ்' என்றெல்லாம் வசூலிப்பது சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டவை என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் 'மெயின்டினென்ஸ் ஃபீஸ்' அல்லது 'பேணுதல் செலவு' என்று வசூலிப்பது சட்ட பூர்வமானதா ? இது நமது கல்வி விதிகளால் அனுமதிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு 'டொனேஷன்' என்று வசூலிப்பதைப்பற்றி கூறும்போது விரும்பிக் கொடுக்கப்படுவதைப் பற்றி நமக்கு ஆட்சேபணையில்லை. 'டொனேஷன்' என்ற பெயரில் பெற்றோர்களை வற்புறுத்தி குழப்பத்தை உண்டுபண்ணி, 'கொயர்ஸ்' செய்து பிள்ளைகளே போய் பெற்றோர்களை வற்புறுத்தி வாங்கி வரும்படி செய்கிறார்கள். அம்மாதிரியான புகார் வந்தால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஏற்கெனவே 'ஸ்பெஷல் ஃபீஸ்' தனிக் கட்டணம் என்ற பெயரில் 16.50 ரூபாய், 11.50 ரூபாய் அளவில் வாங்கலாம் என்றிருக்கிறது. கல்வி ஆலோசனைக் கூட்டத்தில் பள்ளிப் பேணுதல் செலவுக்கு வழியில்லாததால், வெள்ளை அடிக்கக்கூட வசதியற்றிருக்கிறது என்று எடுத்துச் சொன்னபோது, 'அட்வைசரி கமிட்டி'யில் ஒரு முடிவு எடுத்து ரூபாய் 16.50-க்குள்ளாக அடங்கும்படி வழி வகுக்கலாம் என்று நினைத்து லைப்ரரி, கேம்ஸ் ஃபீஸ் போன்றவைகளில் ஓரளவுக்குக் குறைத்து ஒரு தொகையை மிச்சப் படுத்தி, பேணுதல் கட்டணம் என்று வசூலிக்கலாம் என்று ஏற்பாடு செய்தோம். அதுவும் இந்த ஆண்டிலிருந்து வசூலிக்கலாம் என்று முடிவு எடுத்தோம்.

'டொனேஷன்' என்பது ஒரு ஆண்டில் ஆரம்பத்திலோ, இறுதியிலோ கட்டாயப்படுத்தி வசூலிக்கப்படக் கூடாதது என்றுதான் சட்டம் சொல்கிறது. யாரையும் வற்புறுத்தக் கூடாது. யாராவது விரும்பிக் கொடுத்தால் ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் இருக்கிறது. ஆனால் பள்ளிக்கூடத்தில் சேருகிறபோது, கட்டாயப்படுத்தி சிலர் வசூலிக்கும் தன்மை காணப்பட்டால், அரசு அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயலும்.

27th August 1970]

திரு. தெய்வசிகாமணி அருணுசல தேசிகர் : துணைத் தலைவர் அவர்களே, பேணுதல் கட்டணத்தை மாணவர்களுடைய வசதிக்காகப் பயன்படுத்த வேண்டிய நிதியிலிருந்து இப்போது எடுத்திருக்கிருர்கள். திரு. அறிவழகன் அவர்கள் சொன்ன மாதிரி, ஏற்கெனவே மாணவர்கள் தங்கள் தனித் திறன்களை, புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. அறிவியல் நூல்களை வாங்க வழியில்லை. இந்த நிலையில் அதிலிருந்து 5 ரூபாய் எடுத்தால், மாணவர்கள் வஞ்சிக்கப்படுவார்கள். அதனுல் அவர்கள் வாய்ப்பு எதிர்காலத்தில் குறைந்துவிடும். நல்ல புத்திசாலித்தனத்தை வளர்க்கும் திறன் அவர்களிடையே பாதிக்கப்படும். எனவே வேறு நிதியைத் தேடிக் கொள்வதுதான் சரி என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதிலிருக்கிற சங்கடமே வேறு நிதியாக வசூலிக்க வேண்டுமென்ருல், கட்டணத்தை உயர்த்தியாக வேண்டும். அதாவது, தற்போது ரூபாய் 16.50 என்பதற்குப் பதில் ரூபாய் 21.50 வாங்க வேண்டும். மாணவர்களுக்கு வைத்திருக்கிற ரூபாய் 16.50 கட்டணமும் உயரக் கூடாது, பேணுதல் நிதியும் எடுக்கப்பட வேண்டும் என்ருல், முறைப்படி அரசு கொடுக்கிற பணம் மட்டும் போதாது என்ற இக்கட்டான நிலை வருவதால்தான், ஓரளவுக்கு அதிகமாக இந்தத் தொகைக்கு ஒதுக்கிவிட்டு, மீதித்தொகையைப் பேணுதல் கட்டணமாகப் பயன்படுத்தலாம் என்று வைக்கப் பட்டிருக்கிறது. அதே நிலையில் லிட்டரரி அசோசியேஷன், லைப்ரரி இவைகளுக்காக வசூலிக்கப்படும் பணம் முழுவதும் அந்தத் துறைகளுக்கே பயன்படுத்தப்படும் நிலை இருக்கிறது. பேணுதல் முறை மூலமாக பணிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அதுவும் ரூபாய் 16.50-க்குள் அடங்க வேண்டும் என்றுதான் அட்வைசரி கமிட்டியில் எல்லோருடைய ஆலோசனையையும் பெற்று ஆணையாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த முறை இப்போது எல்லோராலும் வரவேற்கத் தக்க சூழ்நிலையில் இருந்து வருகிறது.

S.M.S.M. High School in Sucheendram

*14. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether any representation was received from the Management of S.M.S.M. High School in Sucheendram of Kanyakumari district, that a teacher with eight years of continuous service was discharged from service due to the orders of the Government fixing the cadre strength of posts ; and

(*b*) the action taken thereon ?